


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆவணகாப்பகம்"
பிரதேசசெயலகம்
கண்டாவளை
04/02/2016

# நினைவுகளின் நினைவோடு

(கவிதைத் தொகுப்பு)

## வேல்மகள்

வெளியீடு
**பிரதேச கலாசார பேரவை,**
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நினைவுகளின் நினைவோடு |
| வகை | : | கவிதை |
| ஆசிரியர் | : | வேல்மகள் |
| முகவரி | : | புளியம்பொக்கணை. |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்குரியது |
| முதற்பதிப்பு | : | மார்கழி, 2015 |
| வெளியீடு | : | பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், கண்டாவளை. |
| வெளியீட்டெண் | : | 08 |
| தாள் வகை | : | 70gms |
| பிரதிகள் | : | 350 |
| பக்கங்கள் | : | 78 |
| அச்சுப்பதிப்பு | : | நிசா ஆட்ஸ், புன்னைநீராவி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

**வே**ல்மகள் என்ற புனை பெயரோடு எழுத்துத்துறையில் கால் பதித்துள்ள செல்வி வேலாயுதபிள்ளை சுபிதா அவர்களின் முதல் படைப்பான "நினைவுகளின் நினைவோடு" என்னும் கவிதைத் தொகுப்பு நூல் வெளிவருவது புளியம் பொக்கணைக் கிராமத்திற்குப் பெருமை சேர்க்கின்றது.

பல்வேறுபட்ட கருத்துக்களை உள்ளடக்கிய உயிரோட்டமான கற்பனையும் நிஜங்களும் கொண்ட இக்கவி நூல் வெளியீடு சிறப்புற நிகழ்ந்து இன்னும் இது போன்ற ஆக்கங்களுக்கு இது அடித்தளமாகவும் அமைய வேண்டுமென்று எல்லாம் வல்ல கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் திருவருள் துணைகொண்டு எனது நல்லாசிகளை வழங்கி வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்
**சிவ ஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராசாக் குருக்கள்,**
நாகதம்பிரான் ஆலயம்,
புளியம்பொக்கணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவுகளின் நினைவோடு..

எமது கண்டாவளை பிரதேசத்தின் இளம் படைப்பாளி வேல்மகளின் "நினைவுகளின் நினைவோடு..." பேசுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்கிய ஆர்வம் மிக்க இளம் படைப்பாளிகளில் வேல்மகள் வித்தியாசமானவள். இலக்கியம் எனும் ஊடகத்தினூடு தன் உணர்வுகலந்து இக்கவிதைப்படையலை சமைத்திருக்கிறார்.

கண்டாவளை இயற்கை வனப்பும் இலக்கிய செழுமையும் ஒருங்கே இணைந்த அழகிய பிரதேசம். இப்பிரதேசத்தின் பேரழகு சாமானியர்களையே கவிஞர்கள் ஆக்கிவிடும் ஆற்றல் கொண்டது. கவிஞர்களை சும்மா விடுமா? வயல், வெளி, கடல், கானகம், காற்று அதனூடு கவிதை. இது கண்டாவளைக்கு இயற்கை அளித்த அருங்கொடை. இச்சூழ்நிலையில் பிறந்து வளர்ந்து வாழ்ந்ததாலோ என்னவோ வேல்மகள் தன் உணர்வுப்படிமங்களை "நினைவுகளின் நினைவோடு..." எம்முடன் பகிர்ந்திருக்கிறார். உணர்வு தொட்ட அவர் கவிதைகள் ஆச்சரியம்.

தமிழ்க்கவிதை வரலாறு ஓர் மாகடல். அதற்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்று தொன்மை உண்டு. இன்றுவரை அத்தொன்மை நின்று நிலைப்பது இக்கவிஞர்களின் கவி உள்ளத்தால் அன்றோ? அவ்வகையில் வேல்மகளும் தன் கன்னிமுயற்சியாக கவிதைபடைக்கத் தொடங்கியிருக்கிறார். இது ஆரம்பம். இன்னும் அவர் தமிழ்க்கவிதைக்கடலில் மூழ்கி முத்தெடுக்க நிறைய இருக்கிறது. கவிதைக்கரையில் முதல் படைப்பை படைத்திருக்கிறார். கவிக்கடலில் எல்லைகாண இன்னும் முயலுவார் என்று நம்புகின்றேன். உயர்வடைய வாழ்த்துக்கள்.

**த.முகுந்தன்,**
பிரதேச செயலாளர்,
கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

கண்டாவளை பிரதேசத்தின் கலாசார செயற்பாடுகளை பிரதேச செயலக ரீதியாக ஒருங்கிணைத்து மேம்படுத்தும் நோக்கோடு 2011 ஆம் ஆண்டு முதல் எமது பேரவை செயற்பட்டு வருகிறது. அந்தவகையில் முதன்மைசெயற்பாடுகளாக அதே ஆண்டு முதல் பிரதேச கலாசார விழாக்களையும் கலைஞர் கௌரவிப்புக்களையும் நூல் வெளியீடுகளையும் முன்னெடுத்து வருகிறது.

பிரதேச மலரான வளைஒசையினை ஆண்டுதோறும் 2011ஆம் ஆண்டு முதல் 2015 வரையான காலத்தில் நாதம் 01,02,0,3,04,05 என ஐந்து இதழ்களையும் 2011 ஆம் ஆண்டின் கலாசார விழாவில் கலைஒளி விருதுபெறும் கலைஞர் விபர திரட்டு எனும் சிறு நூலையும் கடந்த ஆண்டில் கண்டாவளை கிராம சேவகபிரிவைச் சேர்ந்த காசிமணியம் எனும் புனைபெயருடன் அழைக்கப்படும் பொ.பாலேஸ்வரன் மாற்றுத்திறன் எழுத்தாளனின் "மண்வாசனை" சிறுகதைத் தொகுப்பு என இதுவரை ஏழு நூல்களை வெளியிட்டுள்ள பேரவை எட்டாவது கவிதைத் தொகுப்பாக வெளிவரும் இந்நூலினை பிரசவிப்பது மனநிறைவைத் தருகிறது.

இவ்வாண்டில் கண்டாவளை பிரதேச செயலக பிரதேச கலாசார அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல் திணைக்கள நிதி ஒதுக்கீடு கிடைக்கபெற்று பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றாக பிரதேச எழுத்தாளர்களின் நூல் அச்சிடலுக்கு வழங்கப்படும் நிதிப்பங்களிப்பு இவ்வருடம் புளியம் பொக்கணை கலவெட்டித்திடலை சேர்ந்த வே.சுபிதா அவர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

வேல் மகள் எனும் புனைபெயருடன் கவிதைகளை எழுதிவரும் வே.சுபிதா அவர்கள் வன்னி மண்ணின் வாழ்வியலுடன் இன்றும் பிணைந்து வாழ்பவர். தமிழர் தம் அடையாளங்களைத் தன் கவிதை ஊடாகப் பதிவு செய்வதில் பேரவாக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கிராமிய வாழ்வியல், இயற்கைவனப்பு, பெற்றோர், காதல், மனித உணர்வுகள், இடம்பெயர்வு தந்தவலிகள்.அவற்றிலிருந்து மீள முனைதல், பெண்ணியம் போன்ற விடயங்களை தன் கவிதைகளின் பாடுபொருளாக கோர்த்துக்கவிப்படைப்பதில் கைதேர்ந்தவராக விளங்குபவர்.

இருபத்தொராம் நூற்றாண்டின் ஈழத்து கவிதை உலகில் குறிப்பாக கிளிநொச்சியின் பெண் கவிஞர்களில் ஒருவராக பத்திரிகைகள் வாயிலாக தன்னை அவ்வப்போது இனங்காட்டிவரும் இவர் இவ்முதலாவது கவிதைத் தொகுப்பின் ஊடாக தனக்கான அடையாளத்தை, நிலைநிறுத்தி, தொடர்ந்து தன் முயற்சிகளில் ஈடுபடுவார் என நம்புகிறோம்.

**பிரதேச கலாசார பேரவை.**
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

## கலவெட்டித்திடல் கண்ணகை கலாமன்ற தலைவரின் வாழ்த்துச் செய்தி

உலகில் பேசப்பட்டு வரும் மொழிகளுள் தனித்துவமான பண்புகளை கொண்டு விளங்குகின்ற மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. அது தன்னகத்தே கொண்டுள்ள இலக்கிய செழுமைகளை குன்றாது பேணிக்காக்கின்ற கலைஞர்கள் வரிசையில் இணைந்து இளம் எழுத்தாளராக திகழ்கின்ற வேல்மகள் அவர்களின் முயற்சியை பாராட்டுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலையோடு இணைந்த எம்வாழ்வு செழிப்பதற்கு இத்தகைய நூலாக்கங்கள் மிகவும் அவசியமானது. எமது மொழியின் இனத்தின் கலை, பண்பாடு, கலாசாரம் விழுமியங்கள் என்பவற்றை இளம் சமுதாயத்திற்கு கையளிக்கின்ற வகையில் நூலாக்கம் அமைந்து தமிழ் மொழியின் பெருமைகாக்கப்படுவதை மகிழ்வுடன் வரவேற்கின்றேன், பாராட்டுகின்றேன்.

**த.சிவரூபன்**
(அதிபர், கிளி/கல்லாறு தமிழ் வித்தியாலயம்.)
தலைவர்,
கலவெட்டித்திடல் கண்ணகை கலாமன்றம்,
புளியம்பொக்கணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

மானிட வயிற்றில் பாம்பாக அவதரித்து ஆலயம் கொண்டு அருளாட்சி செய்கின்ற நாகதம்பிரான் ஆலயம் அமைந்த புளியம்பொக்கணை கிராமமே எனது பிறப்பிடம். கிளி/கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைத் தொடங்கி க.பொ.த. சாதாரணம் வரை கற்று உயர்தரக் கல்வியை கிளி/முருகானந்தாக் கல்லூரியில் தொடங்கிய போதும் அதனைத் தொடர முடியாமல் கிடைத்ததற்கரிய அருமந்த பள்ளி வாழ்க்கை இடையே முற்றுப் பெற்றது எனது துர்ப்பாக்கியமே.பள்ளிக்காலம் தொட்டே எழுத்தாற்றல் கொஞ்சம் கொண்டவளாக இருந்தேன். இதனை அப்போது ஊக்குவித்த ஆசிரியச் செல்வங்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

கவிதை, கட்டுரை, சிறுகதை குறுநாடகம் எனப்பல்துறைகளில் எழுதி வந்தாலும் கவிதை எழுதுவதில் அதிக நாட்டம் கொண்டிருந்தேன். என்னுடைய கவிதைப்படைப்பாற்றலுக்கு மூலகாரணமாக நிற்பவர் எழுத்தாளர் என்ற முகவரியில் நாட்டம் கொள்ளவிரும்பாத எனது தந்தையார் என்பதே நிதர்சனம்.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அவ்வப்போது எனது எண்ணத்தில் தோன்றியவற்றை இன்ப, துன்பங்களை, காட்சிகளை, சாட்சிகளை, கற்பனைகளை, கவிகளாக வரைந்தேன். வரைந்தவற்றை பல பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்தேன். எனது ஆக்கத்திற்கு ஊக்கம் தந்து உந்துசக்தியாக இருந்து களம் அமைத்துக்கொடுத்தவை சில பத்திரிகைகளே அந்த வகையில் சுடர் ஒளிப் பத்திரிகை முதன்மையானது அத்தோடு தினப்புயல், தினமுரசு பத்திரிகைகளும் என்னுடைய கவிவரிகளுக்கு இடம் கொடுத்து வந்தன. என்னுடைய கவியாற்றலை வளப்படுத்தத்துணை நின்ற பத்திரிகைகளுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு கண்டாவளை கலாசாரப் பேரவை ஆண்டு தோறும் வெளியிட்டு வரும் வளை ஓசை மலர்களும் எனது படைப்பை பிரசுரித்திருந்தன. இந்த வகையில் இதற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய கவிதைகளைக் கண்ணுற்று என்னோடும் எனது பெற்றோருடனும் தொடர்பு கொண்டு கவிதைகளைத் தொகுப்புப் புத்தகமாக வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தையும் ஊக்கத்தையும் தந்து கவிதைகளை உரிய இடத்திற்கு எடுத்துச்சென்ற பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் திரு .த.அமலதாஸ் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

எனது கவிதைகளைப் பரிசீலித்து கலாசாரப் பேரவை ஊடாக புத்தக வடிவில் வெளியிடுவதற்கு அனுமதித்து அனுசரணையும் தந்த கலாசாரப் பேரவையின் தலைவரும் பிரதேச செயலாளருமான திருவாளர் த.முகுந்தன் அவர்களுக்கும், ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி தந்து நின்ற சிவாச்சாரியார்,அதிபர் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

இந்நூலை சிறப்புற வடிவமைத்து அச்சிட்டு உதவிய நிஷா ஆட்ஸ் பதிப்பகத்திற்கும் நன்றிகளைக் கூறிக் கொண்டு எனது கவிதைகளை அவ்வப்போது பத்திரிகைகளில் வாசித்து கருத்துத் தெரிவித்து உற்சாகப்படுத்திய ஆசிரியர்கள் உறவுகள் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை கூறிவைக்கின்றேன். கவிதை நூலை வெளியிடுவது தொடர்பில் முழுமனதோடு சம்மதம் தெரிவித்து ஊக்கமூட்டிய எனது தாய், தந்தை சகோதர்களுடன் மீண்டும் எனது நன்றிகளை எல்லோருக்கும் தெரிவித்துக் கொண்டு எனது எழுத்தாற்றல் மேன்மேலும் வளர்ச்சிபெற இறையருள் வேண்டி கவிதைத் தொகுப்பான இக்கன்னிப்படைப்பில் வரும் இலக்கணயக் குறைபாடுகளை விமர்சித்து நெறிப்படுத்தி எனது ஆக்கங்களுக்கு ஊக்கம் தருமாறு அன்போடு கைகூப்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

**என்றும் அன்புடன்**
**வேல்மகள்.**
**கலவெட்டித்திடல்,**
**புளியம்பொக்கணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உயிர்களின் உயிரானவன் | 13 |
| 2. | தாய்மை | 14-15 |
| 3. | என் உயிரின் சுவாசம் | 16 |
| 4. | அன்னையின் உள்ளம் | 17 |
| 5. | உயிரால் ஒரு சபதம் | 18 |
| 6. | மரணித்த மனிதநேயம் | 19 |
| 7. | உண்மைக் காதல் | 20 |
| 8. | வாழ்வைத் தொலைத்து..! | 21 |
| 9. | தமிழன் | 22 |
| 10. | காதலித்துப்பார் ! | 23 |
| 11. | விழுந்துவா புத்தாண்டே ! | 24-25 |
| 12. | ஊமையாக்கப்பட்ட உண்மைகள்.. | 26 |
| 13. | வறுமையில் அகதி | 27-28 |
| 14. | விடியல் | 29 |
| 15. | இறப்பின் இறுதி வலி | 30 |
| 16. | கலைந்த கனவுகள் | 31 |
| 17. | உலகின் நியதி | 32 |
| 18. | வாழும் காதல் | 33 |
| 19. | விடுதலை | 34 |
| 20. | மனித நேயமே உயிர்த்தெழுந்து வா ! | 35-36 |
| 21. | வலிதந்த நாட்கள் | 37 |
| 22. | அஸ்தமித்துப் போகிறது உண்மை இதயங்கள் | 38 |
| 23. | பிரிவில்லாத புரிதல்கள் | 39 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. நினைவுகளின் நிழலில் 40
25. விடுதலையின் வீழ்ந்திடாத சாட்சியங்கள் 41-42
26. உயிருக்கு உயிரானவள் 43
27. எங்கே எங்கள் முகவரிகள்? 44
28. மீண்டும் அவள்... 45
29. பண்பாட்டின் சிதைவுகள் 46
30. குருதியால் ஒரு சரித்திரம் 47
31. ஆத்மாக்களின் மரணஓலம் 48-49
32. அந்த நாளுக்காக.. ! 50
33. இதயம் கனக்கும் வலிகள் 51
34. திசைமாறிய பயணம் 52
35. இனியும் வாழ்வதா...? 53
36. வாழ்வோடு உன் நட்பு 54
37. தோல்வி 55
38. தமிழா? 56
39. உனக்கான மரணிப்பு 57
40. பிரிவின் வலி 58
41. துணிவு 59
42. வரம்தா இறைவா 60
43. நிஜங்களின் நினைவுகள் 61
44. தளர்ந்திடாத தமிழன் 62
45. நினைவோடு பேசும் காதல் 63
46. உயிர்களின் உணர்வு 64-65
47. கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம் 66
48. வாழ்க்கையின் காதல் 67
49. வளமான வாழ்வு 68
50. வாழ்க்கை 69
51. தடுமாறும் தவறுகள் 70
52. வெற்றி 71

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. உயிர்க் குருதிகளை எண்ணிப்பார் 72
54. விடிவுக்காய் ஒரு காத்திருப்பு 73
55. உதிர்ந்த பூக்கள் 74
56. காரிகையின் காத்திருப்பு 75
57. உறைந்து போகும் அன்பு 76
58. நீதியாய் ஒரு தீர்ப்பு 77





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களின் உயிரானவன்

ஏர் பூட்டி
வயல் உழுது,
காலம் பார்த்து
நெல் விதைத்து,
இயற்கையின்
கருணையுடன்
இரவு பகல்
பாராது
நெல் மணிக்கு
உயிர் கொடுத்து,
பக்குவமாய்
பாதுகாத்து,
பருவமாய்
வளர்த்தெடுத்து,
அறுவடையில்
அகம் மகிழ்ந்து,
பார் எல்லாம்
பசிபோக்கும்
உன்னத உழைப்பாளி
உழவன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை

பெற்றவர் உற்றவர்
சான்றோர் கூடி
நாளும் கோளும்
நலமுறப் பார்த்து
தருணம் மிகுந்த
திரு நாள் தன்னில்
திருமணம் கண்டு
பெரு நிறை வெய்தியும்,
திரு நாள் இன்றியே
தினம் தினம் வாடி
பெரு மூச்செறிந்து
பெருங் குறை கொண்டாள்.
அயலவர் அண்டியோர்
அத்தனை பேர்களும்
தயக்க மின்றியே
வாயில் வந்ததை
வசை மொழியாக்கி
பேசித் தீர்த்தனர்
கூசா வாயால்
வெள்ளை உள்ளம்
கொண்டவள் எனினும்
பிள்ளை இல்லாதாள்
என்றெனச் சொல்லியே !


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எள்ளி நகைத்தனர்.
இத்தனை துயரும்
பத்தே மாதத்தில்
பறந்தே ஓடிட
முத்தான "சேய்" பெற்று
முழு நிறை வெய்தியே!
தழுவினள் குழவியை
பழுதிலாத் தாயவள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிரின் சுவாசம்

அன்போடு கண்டிப்பும்
பங்கிட்டே தந்து
அணைத்தெமக்கு
புத்தி சொல்லும்
அன்பான அப்பாவே !
கல்வியிலே முன்னேறி
சாதனைகள் நாம் படைத்து
ஞாலத்திலே நாம் சிறக்க,
கடினமாய் உழைத்து நின்று
தூணாகத் தோள் கொடுக்கும்
அன்பான அப்பாவே !
அகிலத்தில் நீர் வாழ்க !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் உள்ளம்

அன்னையின் உள்ளமே
அன்பின் பிறப்பிடம் - இது
அகன்று விரிந்தது;
ஆழம் நிறைந்தது - எனினும்
அளவு கோல்கள் கொண்டு
அளந்திட முடியாது.
அன்னையின் உள்ளம்
என்றும் ஈரம் நிறைந்தது - எனினும்
பசும் புல் வளராது - அங்கே
பொங்கி வளரும் அன்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரால் ஒரு சபதம்

அயர்ந்து தூங்கி
ஆறுதலாய் ஓய்வெடுக்க
குடிசை கூட எனக்கில்லை
இதைச் சொல்லி அழ
உறவென்று
யாருமில்லை.

விதியை நொந்து
வீதியிலே அலைந்து
பாதியிலே தூக்கம் கெட்டு
மாய்ந்து மாய்ந்து
தொழில் புரிந்தும்
முன்னேற்றம் எனக்கில்லை.

நடுக்கடலில் பயணித்து
இருந்தவையும் இழந்து
நம்பிக்கைத் துரோகங்களும்
கூடவே குழி பறிக்க
வாழ்க்கையே வெறுத்துப் போய்
வாழ்கின்றேன்; நடைப்பிணமாய்.

துன்பங்கள் துளையிட
ஏளனங்களைத் தாண்டி
எதிர் காலம் நோக்கி
எதிர் நீச்சல் அடிக்கின்றேன்
நம்பிக்கையோடு;
நாளைய நாள் எனக்கான நாளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்த மனித நேயம்

அதிக நம்பிக்கையும்
அளவு கடந்த அன்பும்
என்றோ ஒரு நாள்
எங்களையே கொல்லும்.

மனச்சாட்சி இல்லாத
மனித சமுதாயத்தில்
உறவுகளில் ஒரு நாளும்
உண்மை இருக்காது.

மனித நேயம் மரணித்து
மண்ணோடு புதையுண்டு
பிறப்புக்கே அர்த்தமின்றி
இறப்புக்கள் சொந்தமாகின.



ஆட்சிகளே பொய்யான போது
சாட்சிகளுக்கு ஏது கதி !
உறவுகளே! உணருங்கள்.
உங்களை மாற்றுங்கள்.

நிலையற்ற வாழ்வில்
நியாயங்களை நிலை நாட்டி
மனித நேயம் உள்ள
மனிதர்களாய் வாழுங்கள்.

*தினப்புயல். 05.01.2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைக் காதல்

இரு விழிகளோடு
இரு விழிகள் சந்தித்தன.
கண்களாலேயே அவர்கள்
கதைபேசிக் கொண்டார்கள்.

பாசங்களை நிதமும்
பார்வைகளால் பகிர்ந்து - நேசத்தை
நெஞ்சில் கொண்டார்கள்.
பல கோடிப் போலிக்
காதல்கள் வரினும்
பூமியில் இன்னும் புனிதக்
காதல்களும் உண்டு.

உண்மைக் காதல் -
சமாதானம்.
உயிர் பறிக்கும் போலிக்
காதல் - யுத்தம்.
யுத்தத்தில் பல
கொலைகளைச் செய்யாது
பார்தனில்
சமாதானம் செய்து
சந்தோசத்தை
நிலைநாட்டு.

*சுடர் ஒளி, 26 மாசி 03 பங்குனி 2012.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வைத் தொலைத்து....!

கோடி புண்ணியம் வேண்டி
கோயில் போய் தரிசித்து
கும்பிட்டு மன்றாடி
குறைகளைச் சொல்லி அழ
இன்றைய பெண்களுக்கு
இல்லையே நேரமிங்கே.
பட்டினியாய் கிடந்தாலும்
பசிக்குது என குழந்தை அழுதாலும்
தொலைக்காட்சித் தொடரை
தொடர்ந்து பார்த்து
தொடரும்.... என வந்த பின்தான்
தொடரும் இங்கே வீட்டு வேலை.
விஞ்ஞானமோ விரைந்து
விண்வெளிக்குச் சென்றுவிட
உலகமோ முன்னேறி
உயர்ந்து செல்ல
இன்னும் தமிழ்ப் பெண்கள் மட்டும்
இருளுக்குள்ளால் வெளியேறாது
தொலைக்காட்சித் தொடர்களின் முன்னே
தொடர்ந்து வாழ்வை
தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

*சுடர் ஒளி, 01.07 ஆவணி 2012.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன்

மரணத்தின் தோழன்
வீரத்தின் சொந்தக்காரன்
உழைப்பின் நாயகன்
உண்மையின் உடன் பிறப்பு
ஆனால்
துரோகத்தில்
காக்கை வன்னியனும்
இவனே.

*சுடர் ஒளி, 01.07. தை 2012*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலித்துப் பார்!

உன்னை நீயே காதலி
உறவுகளை நிதமும் காதலி
தாய் நாட்டை மனதால் காதலி
ஓய்ந்திடமால் உழைப்பைக் காதலி
விடாமுயற்சியுடன் கல்வியைக் காதலி
விருப்புடன் வாழ்வைக் காதலி - அன்று
வாழ்வைக் காதலித்த உன்னை
வாழ்க்கை நிஜமாய்க் காதலிக்கும்.

*சுடர் ஒளி, 17.23 ஐப்பசி 2012*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிந்து வா புத்தாண்டே !

விடிவெதையும்
தந்திடாமல்
முடிந்து போகும்
ஆண்டே !
என்ன பாவம்
செய்தோம்
எம்மை நீ
வருத்திச் செல்ல.

பிறக்கும் போது
இன்பமாய்
வரவேற்றோம் – நீ
இறக்கும் போது உன்
பரிசு கண்ணீரா?
பச்சைப் பயிர்கள்
எல்லாம் காய்ந்து
பரிதவித்து இறக்கின்றன
நீர் இன்றி.



வந்தோரை வரவேற்கும்
"தேசம் – தம்"
வயிற்றுப் பசி
போக்கக் கூட
இல்லங்கள் தோறும்
நிதமும் அல்லாடப்
போகிறது. மாரிகாலம்
பொய்த்ததென்று
மார் தட்டி அழுதாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கமின்றி
இறங்க மறுக்கின்றன
ஈரமில்லா நெஞ்சம்
கொண்ட
மழைத்துளிகள்.

கடந்து போகும்
ஆண்டே உன்னில்
தடம் பதித்த
நாட்கள் எல்லாம்
சோகங்களின்
சொந்தமாயும்
சோதனைகளின்
இருப்பிடமாயுமே போனது.

பிறப்பெடுக்கும்
புத்தாண்டில்
பிரச்சனைகள் ஒழிந்து
நிம்மதியின் இருப்பிடமாய் இன்பம்
நிதமும் நிலைக்கட்டும்.

*சுடர் ஒளி, 08.14 தை 2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊமையாக்கப்பட்ட உண்மைகள்....

மன்னாரில் புதைகுழியாம்!
மண்டையோடுகள் மீட்பாம்!
தொடரும் மர்மங்களுடன்
தொடர்கிறது செய்தி.

விடை தேடும் வினாவாய்
விரிகிறது செய்தி!
புதைகுழியின் மர்மமும்
புதைக்கப்பட்டு விட்டதோ?!

புதைகுழிகள் ஒன்றும்
புதிதல்ல நமக்கு
மாண்டவர்கள் புதைக்கப்பட்ட
தோண்டப்படும் இடங்களே புதிது.



உலகமே அறியாத
உண்மைகள் பல
இப்படி எத்தனையோ புதைகுழிக்குள்
இன்னும் புதிர்களாய்...

புதைகுழிகள் மீட்கப்பட்டாலும்
புதையுண்டு போன உண்மைகள்
இன்னும் ஊமைகளாகவே
இருளுக்குள்.

*தினப்புயல் 16.03.2014.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையில் அகதி

வாழ்க்கை எனும் நாடக அரங்கில்
வாழ்வியல் மாற்றங்கள் பல.
அவலமும் ஏழ்மையும் சூழ
அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

அனுதினமும் வாழ்வில்
அல்லாடித் திரியும் அவன்
ரணங்களைச் சுமந்தபடி
பிணங்களுடன் வாழ்கின்றான்.

தொடர்கதையாய்ப் போன
இடர் சூழ்ந்த வாழ்க்கையதை
படிப்படியாய்த் தினமும்
அடியெடுத்துக் கடக்கின்றான்.

அவலத்தை மட்டுமே சொந்தமாக்கிய
அகதி வாழ்க்கையது
பல்வேறு நாட்டவரையும்
பலவிதமாய் சூழ்கிறது.

அஞ்சு வயது பிஞ்சையும்
பஞ்சம் கொன்று போனது;
நெஞ்சம் எல்லாம் வலிக்குது;
தஞ்சம் எங்கு புகுவது ?

சோமாலியா, எதியோப்பியா என்று
சோற்றுக்கு அல்லாடும் இடங்கள் எத்தனை
வறுமை தொடர்ந்து வாட்ட
வழியெங்கும் அகதிகளின் கண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையற்ற மனித வாழ்வில்
நிதமும் நிம்மதி இல்லை
தொலைத்து விட்ட வாழ்வின் வசந்தத்தை
தொலைவில் தேடுகின்றோம்

உலக நாடுகள் பல
உணர்ந்து கை கொடுத்தால்
வறுமையையும் அகதி வாழ்வையும்
மறுப்பின்றி ஒழித்திடலாம்

முடியுமா வறுமையின் கொடுமை
விடியுமா அகதி வாழ்க்கை
உலகில் தொடரும் அவலம்
விலகவேண்டும் விரைவில்

அகதிகளின் வாழ்வும் விடிந்து
அல்லாடும் வறுமையும் முடிந்து
எல்லோரும் எல்லாம் பெற்றே
நல்லதோர் உலகம் காண்போம்

2013ம் ஆண்டு. பிரதேச மட்ட தேசிய கலை இலக்கிய
போட்டியில் திறந்த பிரிவில் 1 ஆம் இடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல்

வாழ்க்கையில் வழிகள்
பிறக்காத போது
வலியினாலே விழிகள்
கசிகின்றன... மனிதா
துயரங்கள் மட்டும்
தான்
வாழ்வில்லை.
படிகளைத் தாண்டிப்
பார்!
விடியல் உன்வசம்.

*சுடர்ஒளி, 02.08 ஆடி 2014*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பின் இறுதி வலி

மறு ஜென்மம்
என்பது உண்மையெனில்
மரணத்திலும்
மண்டியிட்டுக் கேட்கிறேன்
இன்னொரு ஜென்மத்திலும்
மானிடப் பிறப்பு மட்டுமல்ல
வேறெந்தப் பிறப்புமே வேண்டாம்.
பிறந்து விட்ட இந்தப் பிறப்பிலேயே
வலிகள் தந்த
விழி கசிவுகள் - என்
இறப்பின் இறுதி நிமிசத்தோடு
விடைபெற்றுப் போகட்டும்.

*சுடர்ஒளி, 14.20 தை 2015*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த கனவுகள்

புதையுண்டு போன கனவுகளால்
நிரந்தர உறவாகிப் போனது கண்ணீர்
விழிகள் அவளை வெறுக்கிறது
ஏனெனில் எப்பொழுதும் வழியும் கண்ணீரால்.

கனவுகள் சிதறிப்போனதால் - அவள்
மனம் பிணமாகி நீண்ட நாள்....
இருந்தும் உடைந்து போன கனவுகளுடன்
உடைந்த கண்ணாடித் துண்டுகளாய் - அவள்.....
*சட்டத்தில் ஏனும்*
*பட்டத்தை வென்றிட*
*இன்னும்தான் காத்திருக்கிறாள்*

*தினப்புயல் 29.12.2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் நியதி

வேரோடு சாய்ந்ததென
மார் தட்டி அழுதாலும்
மாண்டவர்கள் எப்போதும்
மீண்டிடப் போவதில்லை.

மானிடமே! மரணம் என்பது
மறுக்க முடியாத உண்மை
நியதிகளை யாராலும்
நிர்ப்பந்தித்து மாற்றமுடியாது.

இன்பமும் துன்பமும்
இணைந்ததே வாழ்க்கையென்று
உணர்ந்து நடை போடுங்கள்
உங்களாலும் வாழ முடியும்.

*சுடர் ஒளி, 01.07 தை 2014*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் காதல்

"காதல் ஒரு பூஞ்சோலை" - உயிரை
காவு கொள்ளும் வரைக்கும்
காதல் ஒரு வசந்த காலம் - இதயம்
காய்ந்து சருகாகும் வரைக்கும்.

காதல் என்பது கண்ணீர் துளிகள் அல்ல
காட்டாறாய் புரண்டோடும் வெள்ளம்
உலகினில் உண்மைக்காதல் தினமும்
பல கதைகள் சொல்லி பல யுகங்கள் நிதம் வாழும்.
காதலர்கள் மாண்டாலும்
கல்லறைகள் உயிர் வாழும்.

*சுடர் ஒளி, 20.26. வைகாசி 2012.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

எத்தனை வேதனைகள்
எண்ணற்ற சோதனைகள்
முடிவில்லாத் துன்பங்கள்
முடியவில்லை அவலங்கள்.

யார் துடைப்பார் கண்ணீரை
யார் புரிவார் எம் அவலத்தை
நிலை தடுமாறுகின்றோம்
நிம்மதி இல்லை இங்கே.

தமிழர்க்கா இந்த நிலை
தடுமாற மாட்டோம் - என்றும்
உணர்வொன்று உள்ளவரை
உழைத்திடுவோம் தமிழர்க்காய்.

*சுடர் ஒளி, 03.11 மாசி 2012*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயமே
# உயிர்த்தெழுந்து வா!

மனச்சாட்சி இல்லாத சமூகத்தில்
மனித நேயம் எரிந்து கொண்டிருக்கிறது
துடிதுடித்து மனிதம் இறக்க
துன்பத்தை இரசிக்கிறான் மானிடன்.



மண்ணிலுள்ள மாந்தர் எல்லாம்
மனிதம் இன்றிப் போகிறார்கள்
எண்ணிலடங்காத் துன்பங்கள்
எம்மை இங்கே வாட்டுகிறது.

நவீனத்தின் விரைவு வளர்ச்சி
நன்மைகள் விரைவாய் வீழ்ச்சி
அன்பும் அழிந்து போச்சு
அட்டூழியம் உயர்ந்து போச்சு

உயிர் வலிக்கும் கணங்கள்
உணர்வுகள் ஊமையாகிப் போனது
இப்படியும் நடக்கிறதா என
இதயம் அஞ்சிப் போகிறது.

பரந்து பட்ட உலகில்
இரக்கமின்றி எத்தனை கொலைகள்;
உயிர்கள் உன்னதமானவை என
உயிர்களே உணர்ந்துகொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட சமூகமே !
மாண்டு போவது நியதிதான் - ஆனால்
இரக்கமில்லாத கொலைகளைச் செய்து
இன்பம் என்ன காண்கிறீர்கள்.

கொலைகளும் கொள்ளைகளும்
கொட்டிக்கிடக்கும் உலகில்
கற்பழிப்பு என்னும் சித்திரவதை
கண்மூடித்தனமாய் நடக்கிறது.

மனித உறவுகளே
மனச்சாட்சியை எரிக்காது
உண்மையுள்ள உறவுகளாய்
உணர்வுகளுக்கு இடமளியுங்கள்.

தொடர்கதையாய் போன
தொடரும் அட்டூழியங்களை எல்லாம்
முடிவுக்கு கொண்டு வந்து
விடிவொன்றைக் கண்டிடலாம்.

மனித மனங்கள் எல்லாம்
மனித நேயத்தை வளர்த்தால்
மாண்டு போன மனிதம் இங்கே
மீண்டு வரும் உயிர்த்தெழுந்து........

2014 ஆம் ஆண்டு பிரதேச மட்ட தேசிய கலை இலக்கிய போட்டி திறந்த பிரிவில் 1ஆம் இடம் பெற்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிதந்த நாட்கள்

பிணங்களோடு
பிணங்களாய்
பிதற்றிய மொழிகளோடு
இதயம் நொருங்கிய நாட்கள்
மறக்கவும் இல்லை
மறந்திடப்போவதும் இல்லை.
வலியோடு கிலி தந்த நாட்கள்
வழி தெரியாமல் திணறிய நாட்கள்
யார் மறப்பார்கள் - இதை....
யார் தான் மறப்பார்கள்.
யுகங்கள் கடந்தாலும்
சோகத்தின் சுவடுகள்
கண்ணீர்த் துளிகளோடு
மண்ணில் நிரந்தரமே.... !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமித்துப் போகிறது உண்மை இதயங்கள்

இதயத்தின் வலியை
இதமாய் வருடிவிட
உண்மையான ஒரு உறவு
உண்மையில் எனக்கில்லை.

மௌனத்தின் தேடலில்
மௌனித்துப் போகிறது இதயம்
உள்ளத்தின் உயிரணுக்கள்
உறைந்து போயின வலியினால்

உறவாடும் பலருக்கு – என்
உள்ளத்தின் வலி புரிவதில்லை
பிறப்பு என்ற சாபக் கேட்டை
இறப்பு வரை யாசிக்க வேண்டுமா?



நிசப்தமாகிய பொழுதுகளிலும்
நிம்மதி தேடி அலைகின்றேன்.
வலிகள் வதைக்கின்றனவே தவிர
வழி ஒன்றும் அமையவில்லை.

போலியான உறவுகளுக்கு மத்தியில்
போதும் என்றாகிவிட்டது வாழ்க்கை
அன்பை புரிந்து கொள்ளாதவர்கள் மத்தியில்
அஸ்தமித்துப் போகிறது உண்மை இதயங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவில்லாத புரிதல்கள்

சாதகம் பார்த்து
பாதகங்கள் இல்லையென்று
மூத்தவர்களின் முடிவோடு
மூன்று முடிச்சிடும்
திருமண பந்தத்திலும்
திருப்தி என்ன கண்டீர்?

சாத்திரியார் வீடேறி
சாதகமும் பார்த்து
நல்ல பொருத்தம் என்று
நம்பிக்கையாய் கட்டி வைத்த
திருமண பந்தம் என்ன
தித்திப்பில் திகழ்கிறதா?

மாந்தரது வாழ்வினில்
காந்தர்வ மணமும்
நிச்சயமாய் இன்பம் என்று
கச்சிதமாய் சொல்ல வில்லை.
காதல் கல்யாணங்கள் எல்லாம்
காலம் எல்லாம் வாழ்கிறதா?



காதலித்துக் கரம் பிடித்தாலும்
சாதகங்கள் பார்த்திட்டாலும்
இரு மனங்கள் இணைந்திட்ட
இல்லற வாழ்க்கையதில்
புரிதல்கள் இருந்து விட்டால்
பிரிவுகள் இங்கு இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளின் நிழலில்...

நினைவுகள்
உயிரற்றவைதான் - ஆனால்
அந்த நினைவுகள் தான்
எத்தனையோ
இதயங்களின் துடிப்பை
இயங்க வைக்கின்றன.
உயிரற்ற நினைவுகள் தான்
இன்று உயிர் வாழும்
எத்தனையோ ஜீவன்களின்
உயிர் மூச்சு.
உயிர் உள்ள உறவுகளால்
வாழ வைக்க முடியவில்லை - ஆனால்
உயிரற்ற நினைவுகளின்
நினைவோடு
உயிர் வாழ்கின்றன
உண்மை ஜீவன்கள்.
இந்த நினைவுகள்தான்
இன்னும் இன்னும்
எத்தனையோ இதயங்களின்
உயிர் மூச்சாய் உறவாய்
உயிராய் இன்னும் திகழ்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையின் வீழ்ந்திடாத சாட்சியங்கள்

முண்டங்களாய் காட்சி தரும்
முகமாலைப்பனை மரங்களே !
கண்ணீர் கதை சொல்லும்
மண்ணின் சாட்சியங்கள் நீங்கள்.

விடுதலைக் குருதிகளின்
வித்துடல்கள் வீழ்ந்த மண்
சோகங்களைச் சுமந்தபடி
சோர்ந்து போய் இருக்கிறது.

மண்ணை முத்தமிட்டு
மடிந்து போன உறவுகளின்
வீரத்தடங்களை சுமந்த
வீர மண் முகமாலை.

குண்டுகளால் சல்லடையாக்கப்பட்டு
குருதிகளால் நனைக்கப்பட்ட முகாலையே!
உன்னைக் கடந்து செல்லும் நிமிடங்கள்
என்னையறியாமலேயே தலைசாய்க்கின்றேன்.

தமிழரின் கதை சொல்லி
தலை இழந்தும் வீழ்ந்திடாத நீயே
உலகிற்கு தலை நிமிர்ந்து
உண்மைகளை உணர்த்தி நிற்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து போகாத தமிழரின் வாழ்க்கை
மடிந்த உறவுகளின் நினைவோடு
செங்குருதி பாய்ந்த மண்ணில்
பங்கம் இன்றி இனித் தொடரும்.

களங்களில் உயிர் காத்த
கருணை கொண்ட உள்ளங்களே
வீரத்தமிழரின் வரலாறு சொல்லும்
வீழ்ந்திடாத சாட்சியங்கள் நீங்களே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருக்கு உயிரானவள்

தரணியிலே தவழ முன்பே
தன்னுள்ளே அடைகாத்து
அகிலமதைக் கண்ட பின்பும்
அன்பால் அணைத்திட்டு
மழலை மொழி கேட்டு
மகிழ்வுறும் அன்னையே !

தத்தி நடக்கையிலே
பத்திரமாய் கை பிடித்து
சரித்திரத்தில் சாதிக்க
சத்தியமாய் உழைக்கும்
பெருமையான பெண்ணவளே
பெற்றவளே நீ கடவுள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே எங்கள் முகவரிகள்?

முகவரிகள் தொலைக்கப்பட்டு
மனங்கள் சடமாகி
கனவுகள் புதைக்கப்பட்ட
கல்லறைக் காவியமாய்
மரணத்தின் பிடிக்குள்
நகர்கிறது நம் வாழ்க்கை.

தேடுகின்றோம் தினமும்
உறவுகளின் சுவாசங்களை
காற்றிலே கலந்து வரும்
சுவாசங்கள் எவையும்
எம் இனத்தின் சொந்தமில்லை
என்றெமக்குப் புரிகிறது.



தொடர்புகளைப் பெற்றுவிட
வழியேதும் நமக்கில்லை
சோகங்களைச் சொல்லி அழ
சொந்தம் என்று இங்கு இல்லை,
உறவுகளே தேடியும்
உமக்கு நாம் கிடைப்போமா?

காணாமல் போனவராய்
காலமெல்லாம் இருந்து விட்டால்
காத்திருக்கும் உறவுகளே !
சொந்த முகவரி தேடி வரும்
எங்கள் சுவாசங்களையாவது
நீங்கள் சுவாசித்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அவள்...

வலிகளைத் தந்துவிட்டு
விடைபெறும் ஆண்டே
கடந்து போன ஆண்டுகளும்
உன்னைப் போல்தான் விடை கொடுத்தன.

விடைகொடுக்கும் போதாவது
விடிவு தருவாய் என்றால்
மனசே இல்லாத ஆண்டுகளாக
மடிந்து போகின்றன ஒவ்வொரு ஆண்டும்.



காலங்களும் கரைகின்றன.
கண்ணீர் மட்டும் இன்னும் சொந்தமாய்
அடுத்த ஆண்டும் பிறந்தாச்சு - ஆனால்
வாழ்க்கையில் பிடிப்பே இல்லையே !

எப்படியோ இந்த ஆண்டும்
விழி கசியவே விடைபெறும் - ஏனெனில்
தொடரும் எத்தனையோ ஆண்டுகளின்
தொலைந்திடாத பரிசு இதுதானே.

தலைவிதி என்பது உண்மையோ இல்லையோ
தடுமாறும் மனதுடன் தவிப்புடன்
மாண்டு போகாத அவள்
மீண்டும் தொடர்கிறாள் அவள் பயணத்தை.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டின் சிதைவுகள்

பண்பாடு படும்பாடு
மண்ணிலே பெரும்பாடு.
நாகரிக விருப்போடு
மேலைத்தேய உடுப்போடு.
கால மாற்றத்தோடு
கலாசார சிதைப்போடு
தமிழரின் பண்பாடு
சிதைபட்டுப் போகிறதா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதியால் ஒரு சரித்திரம்

எங்கள் வரலாறு
பேனா மை கொண்டு
வரையப்பட்டது அல்ல.
கனவுகள் மெய்ப்படாமல்
கல்லறைக்குள் உறங்கும்
உணர்வுகள் விழித்தே
விடியலை வேண்டும்
மனிதரின் குருதியால் வரையப்பட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்மாக்களின் மரண ஓலம்

இராப்பொழுது
இருள் முக்காடிட்டு
இருக்கிறது.
மக்கள் உறக்கத்துள்
சங்கமித்து
விட்டார்கள்.

காற்றின் வேகத்தில்
மரங்கள்
சலசலத்தன
எங்கோ ஒருமரத்தில்
ஆந்தையின்
அலறல் சத்தம்.
அவள் கண்விழித்துக்
கொள்கிறாள்.
கடிகாரமுள்
நேரம் பதினொன்றைக்
காட்டுகிறது.
இப்பொழுது எங்கிருந்தோ
அவலக்குரல்களும்
கேட்கின்றன.
ஆம்!
அவையெல்லாம்
மக்களின் அழுகுரல்களே தான்.
அவள் விழிகள்
கசிகின்றன.
அந்த இறுதி நாட்களை எண்ணி
அவலப்பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இறுதி நாட்களில்
மடிந்துபோன
உறவுகளின் அழுகுரல்களே அவை.
செவியை கூர்மையாக்குகிறாள்
அழுகுரல்களுக்குள்
அவளுக்கு பரிச்சயமான
குரல்களும் ஒலித்தன.
ஆம். அது... அது ...!
அவரே தான்.
அவள் இதயம்
வேகமாகத் துடிக்கிறது.
அந்த அழுகுரல்களுக்குள்
அவள் அன்புக்
கணவனின் கதறலும்
அவள் காதோடு
சங்கமிக்கின்றது.
பிரிவுகளோடும்
அவலங்களோடும்
மாண்டுபோன
ஆத்மாக்களின்
கதறல்கள்.
இன்னும் காற்றில்
கலந்த வண்ணமே
இருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்த நாளுக்காக.....

வெண் மணல் கும்பியிலே
வெண் நிலவின் வெளிச்சத்திலே
பல கதைகள் நாம் பேசி
கலகலத்த நாட்கள் எல்லாம்
நிஜங்களாக இன்று இல்லை
நிஜங்களின் நிழல்கள் மட்டுமே இன்று
நெஞ்சங்களை வந்து
நெருடிவிட்டு செல்கிறது.
அந்தப் பசுமையான கடந்த காலம்
அழகான நிகழ்காலம் ஆகாதா!
வரண்டு போன ஊரும்
வற்றிப்போன நதியும்
புன்னகை இல்லாத பொழுதுகளும்
புரிந்துணர்வு இல்லா மானிடமும்
இன்று
நிஜங்களாக..............

*சுடர் ஒளி, 26 புரட்டாதி 02 ஐப்பசி 2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனக்கும் வலிகள்

எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாகின.
எதிர்காலம் சூனியமாக்கப்பட்டது.
நம்பிக்கைகள் சிதைந்து போயின.
நரக வாழ்க்கையே சொந்தமாகியது.

நிலையற்ற வாழ்வதனில்
நிதமும் இதயம் கனக்கும் வலிகள்.
புரிதல்கள் இல்லாத மானிடத்தில்
புன்னகை தொலைந்து போய் பல நாள்.

மனிதர்கள் மரணித்துப் போகலாம்
மனித நேயம் மரணிக்கக் கூடாது.
தொலைந்திடாத துன்பங்களோடு
தொடர்கிறது மானிட வாழ்வு.

*தினப்புயல்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசை மாறிய பயணம்

போதைப் பொருட்களுக்கு
போகாதீர் அடிமையாக
வாழ்க்கையைத் தொலைத்து விட்டு
வாடாதீர் உறவுகளே!

இளைய சமுதாயமே
இன்றைய உலகதனில்
நல்ல நண்பர்களை
நன்கறிந்து பழகுங்கள்.

போதைக்கு அடிமையாகி - நல்ல
பாதைகளை இழக்காதீர்.
இருண்டு போன வாழ்வினை
இருளுக்குள் தேடாதீர்.

அபின், கஞ்சா என்று
அடிமையாய் அலைந்து
அழகான வாழ்க்கையதை
இழந்திடாதீர் உறவுகளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் வாழ்வதா......!

இதயம் நேசிப்பது - என்
இறப்பை மட்டும் தான்
பிறப்புக்கு அர்த்தமில்லாத
இவ் உலக வாழ்வில்
நிதமும் வலிகளைச் சுமந்து
விழிகள் கசிவதை விட
வலி தெரியா இறப்பிருந்தால்
வழி விடுங்கள்,
என் விழிகள்
நிரந்தரமாக மூடிக்கொள்ள.

*சுடர்ஒளி, 01.07.தை 2014.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வோடு உன் நட்பு

உயிரோடு உறவாடும்
உன்னதமான நட்பு
சண்டை பிடித்தாலும்
சலிக்காதது உன் நட்பு.

வாழ்க்கையில் முடிவு வரை
வாழ்வோடு உன் நட்பு
கலையாத நினைவுகளுடன்
நிலையாக வர வேண்டும்.

தோழமையின் இணைப்பு
தோற்றிடக்கூடாது இறுதிவரை
உரிமையான உறவெனவே - நம் நட்பு
பிரிவின்றித் தொடரட்டும்.

*தினப்புயல். 01.06.2014*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வி

முடியாது என முடங்கி
முயற்சி இன்றி
பிறர் பழிக்க
தலைகுனிந்து நீ இருந்தால்
பின்நோக்கி
பாழ்குழிக்குள்
மாண்டு போகும்
உன் வாழ்வு.

*சுடர்ஒளி*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழா !

வீரம் நிறைந்த வாழ்வில்
மரணங்கள் சொந்தமாய்
அகதி வாழ்வதனில்
அல்லாடிக் கொண்டிருக்கிறோம்.

வளர் பிறையும் தேய்பிறையும்
வந்து போகும் வாழ்வில்
தேய்பிறையே சொந்தமாகி
மாய்கிறது தமிழினம்.

நடக்கும் சீர் கேடுகள்
நம்மைக் கலங்க வைத்தாலும்
தமிழினத்தை நிமிர்த்தி விட
தலைவனொருவன் இல்லையே!

ஒட்டு மொத்த தமிழினமும்
ஒன்று பட்டு சிந்தியுங்கள்
தங்கத் தமிழினத்தை
தரணியில் உயர்த்திடுங்கள்.

*சுடர்ஒளி, 13.19.கார்த்திகை 2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கான மரணிப்பு..!

இதயம்
உனக்காகத் துடித்தது.
நுரையீரல்
உன்னை எண்ணி சுவாசித்தது.
அன்று
நான் உனக்கானவளாய்
இருந்தேன்.
இப்போ இதயத்துடிப்பு
குறைந்து கொண்டே போகிறது.
நுரையீரல்
சுவாசிக்க மறுக்கிறது.
ஏனெனில், நான்
எனக்காக மட்டும்
வாழ நினைப்பதால்.
நிச்சயம் இதயமும், சுவாசமும்
உனக்காகவே ஒரு நாள்
நின்று போகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவின் வலி

வலிகளைச் சுமந்து
மரணித்துப் போன இதயம்
விழிகள் கலங்க - மனம்
மௌனித்து விடைகொடுக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவு

உலகத்திற்காக
உன்னை நீயே
தாழ்த்தி விடாதே.
உலகின் நன்மைக்காக
நாம் வீழ்ந்து போகலாம் - ஆனால்
உலகிற்கு அஞ்சி
நம்மை நாமே
வீழ்த்தி விடக் கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் தா இறைவா!

துன்பம் வருவது
வாழ்க்கையில் சகஜம் - ஆனால்
துயரமும் சோதனையுமே
வாழ்வின் முகவரியானால்
உலகினிலே உயிர் வாழ
உயிர்கள் விரும்புமா?
ஒரு முறையேனும்
இன்பத்தை தந்து விடு
இறைவா! இவள் உயிர்வாழ
வரம் ஒன்று தந்து விடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜங்களின் நினைவுகள்

கருவறையின் ஞாபகம்
குழந்தை சிரிப்பு.
பள்ளி சென்ற பருவம்,
பருவத்தில் காதல்,
காதலுக்காய் காத்திருப்பு,
காதல் தந்த சுகம் - இப்படி
நினைவுகளுடன் இவள்
நிஜமாகவே காத்திருக்கிறாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளர்ந்திடாத தமிழன்

குருதி வழிகிறது,
கால்கள் தள்ளாடுகின்றன,
பசி வாட்டுகிறது,
பிணம் தின்னும் பேய்கள்
துரத்திக் கொண்டே இருக்கின்றன.
அவன் இருப்பதற்கும்
இடமின்றி ஓடிக் கொண்டே
இருக்கின்றான்,
இன்னும் நம்பிக்கையை
கைவிடாது....
முடியும் என
ஓடிக் கொண்டேயிருக்கின்றான்,
அவன் தமிழன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவோடு பேசும் காதல்

என் அன்பு,
உண்மை என்று
என் மனதுக்கு தெரியும்.
என்றோ ஒரு நாள் - என்
அன்பும் காதலும்
உண்மை என்று
நீ அறிந்து கொள்வாய்.
அன்று சில வேளை
நான் உன்னருகில்
இல்லாமல் போகலாம்.
ஆனால் என்
நினைவுகள்
உன்னைச் சுற்றியே
வலம் வரும் - அன்று
என் அன்பைத் தேடும்
உன் நினைவுகள்
நிச்சயம் என்
நினைவுகளோடு
நிஜமாகப் பேசும்
அன்று தான்
என் உண்மைக்காதல்
உனக்குப் புரியும்.

*சுடர் ஒளி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களின் உணர்வு

மானிடனே!
என்னோடு பழகி
என்னை அனுபவித்து
இன்பமுற்று
இன்று நீ வெறுப்பது
நியாயமா?

என்னை அழிப்பதில்
நீ அடையும்
இன்பம் தான்
என்ன?

நான் இல்லை
என்றால்
நீ உயிர்
வாழ மாட்டாய்
இது தெரிந்திருந்துமா
என்னை
அழிக்கின்றாய்.

ஓ..... மானிடமே!
சுவாசிக்க காற்றின்றி.
குடிக்க நீரின்றி,
உயிர்வாழ
உணவின்றி,
அல்லல் படும் போது தான்
என்னை
எண்ணிக் கொள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்தான கட்டத்தை
அடைவதற்கு முன்பே
அவசியமாய் அவசரமாய்
எங்களில் பலரை
எல்லோரும் நாட்டி
எங்களை வளருங்கள்.
நாங்கள் உங்களுக்கு
உயிரூட்டும் மரங்கள்.

நீங்கள் மட்டுமல்ல
நாளைய சந்ததியும்
நலமோடு வாழ்ந்துவிட
நாமிருப்போம் துணையாக.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்

வெடியோசைகளின் மத்தியிலே
மடிந்து போன உறவுகளே!
நெஞ்சினிலே பூவெடுத்து
அஞ்சலிக்கின்றோம் கண்ணீரால்;

பச்சிளங்குழந்தை முதல்
பள்ளிச் சிறுவர்களையும்
பார்த்திருக்க நொடிப்பொழுதில்
பாவி எமன் உயிர் எடுத்தான்;

இளைய சமுதாயமும்
இரத்தத்தில் மாண்டது.
மூத்த பெரியவர்களும்
மூச்சு நின்று போனார்கள்.

ஆண்டுகள் கடந்தாலும்
ஆறாத துயரங்களுடன்
மடிந்த எங்கள் உறவுகளுக்காய்
அடிபணிந்து அஞ்சலிக்கின்றோம்.

*சுடர் ஒளி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கையில் காதல்

சிரிப்பு அழுகை
இன்பம் துன்பம்
இணைவு பிரிவு
இப்படி வாழ்வின்
நேர் மறையானவற்றை
அனுபவிக்க நினைத்தால்
காதலித்துப் பார்
வாழ்வின் எல்லாப் பக்கத்தையும்
காதலே கற்றுக் கொடுக்கும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வளமான வாழ்வு

நினைவுகள் எல்லாம்
நிஜங்கள் ஆகினால்
மனித குலத்திற்கு
மரணமும் இல்லையே;

போராட்டமும்
போட்டியும் தானே
வளமான வாழ்வை
வனப்பாய் வழிப்படுத்தும்.

முயற்சிகள் செய்து
உயர்ச்சிகள் அடைவாய்;
கனவுகள் எல்லாம்
நனவுகள் ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

வாழ்க்கை !
முட்கள் நிறைந்த
பாதையிலே
செல்லும்.
அதைத்தளர்த்தி
முன்னேறி வா;
உலகம் உன்னை
வாழ்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுமாறும் தவறுகள்

தவறுகளே செய்யாத
மனிதர்கள் என்று
தவறியேனும் யாரும்
இருந்திடப் போவதில்லை.

தெரிந்தோ தெரியாமலோ
அறிந்தோ அறியாமலோ
தடுமாறிக் கூட
தவறுகள் நிகழ்ந்திருக்கும்.

மன்னிக்கவே முடியாத
மாபெரும் தவறுகளும்
எத்தனையோ பேர்
நிச்சயமாய் செய்திருப்பார்.

மன்னிக்கவே முடியாத
தவறுகளை செய்தவரை
மன்னிப்பது கூட
தவறு தானே!

ஒரு தடவை தவறை
செய்து விட்டோம் என்று
தொடர்ந்து தவறுகளுக்கு
சந்தர்ப்பத்தை அளிக்காதீர்.

உங்களுக்கு நீங்கள்
உண்மையாய் மாறுங்கள்
தடுமாறிக் கூட
தவறுகள் நடக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி

வீழ்ந்து விடாதே அல்ல
வீழ்ந்தால்..........
மீண்டும் முடியும். என்று எழு!
நீண்டு கொண்டே செல்லும்
உன் வெற்றிப் பயணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்க் குருதிகளை எண்ணிப்பார்.

இதயம் ஒரு தடவை
துடிக்காவிட்டால்
உன் நிலையை எண்ணிப்பார்.
இப் பூமி ஒரு முறை
சுற்றாவிட்டால்
உயிர் ஜீவன்களை எண்ணிப்பார்.
காற்று ஒரு தடவை
வீசா விட்டால்
உயிர் சுவாசங்களை எண்ணிப்பார்
காலம் ஒரு முறை தமிழரை
எண்ணாவிட்டால்
உயிர்க் குருதிகளை எண்ணிப்பார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவுக்காய் ஒரு காத்திருப்பு !

முடியும்! என்ற
விடிவின் நம்பிக்கையில்
இருள் சூழும் போதெல்லாம்
இருளுக்குப் பின் நிச்சயம்
விடிவு வரும் என
விழி திறந்து காத்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்த பூக்கள்

சிறகுகள் விரித்திட
காத்திருந்த பறவைகள்
காலைப் பொழுதினிலே
கருகிச் சாய்ந்தன.

கொத்துக்குண்டுக்குள்
பள்ளி மொட்டுக்கள்
சற்று நிமிடத்தில்
சருகாகி வீழ்ந்தார்கள்.

குருதி பாய்ந்திட
குற்றுயிராய் மீண்டாலும்
மனம் பட்ட வலியை
மறக்கவில்லை மீண்டவர்கள்.

சிறகடித்துப் பறந்த
சிட்டுக் குருவிகள்
பெற்றோரும் கதறியழ
மௌனமாய் உறங்கினார்கள்.

எதிர்காலக் கனவுகளை
நெஞ்சிலே சுமந்தவர்கள்
கனவுகள் மெய்ப்படாமல்
நீள் துயில் கொண்டார்கள்.

காலைப் பொழுதினிலே
காலத்தின் சாபக் கேட்டில்
உயிர்ப் பூக்கள்
வாடி உதிர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரிகையின் காத்திருப்பு

காதலுடன்
காதலனுக்காய்
ஒரு காரிகை
காத்திருக்கிறாள்.

கனவில் அல்ல
நிஜத்திலே
நிஜமாகவே
காத்திருக்கிறாள்.



போர் சென்ற
வீரக் காதலனின்
வரவுக்காய்
காத்திருக்கிறாள்.

களம் சென்று
கிழமாகி வந்தாலும்
உண்மைக் காதலுடன்
உயிருள்ளவரை காத்திருப்பாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறைந்து போகும் அன்பு

ஒரு கொடியில்
மொட்டுக்களாகி
உயிராகும்
உறவுகள்
கூடித் திரிந்து
குலவிய நாட்களை
நினைத்திட
மறுக்கின்றன.
விசித்திரமான
வாழ்க்கையெனும்
நகரும்
நீரோட்டத்தில்
உறவுகளும்
உணர்வுகளும் கூட
உயிரோட்டமின்றி
உறைந்து
கொண்டிருக்கின்றன.
கால மாற்றத்தில்
அன்பையும் கூட
அடகு வைத்து
விட்டார்கள்.
காலங்கள்
கடந்து விட்டால்
அடகுவைத்த
பொருளை
மீட்டிட நினைத்தாலும்
கை வந்து
சேராது என்று
காலம் தான்
புரிய வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியாய் ஒரு தீர்ப்பு

பள்ளிச் சிறுமிகள்
யுவதிகள் என்று
பாகுபாடு இன்றி
கற்பழிக்கப் படுகிறார்கள்.

துணிந்து பெண்கள்
நடந்திட முடியவில்லை
வதைபட்டுப் போகிறது
வழியிழந்து பெண்ணினம்.

கொடூரமாய் கற்பழித்து
கொலைகளையும் செய்யும்
காம வெறியர்களுக்கு
தண்டனை தான் என்ன?

நீதி தேவதையே !
நீதி என்ன என்று
நீதியை நிலை நாட்டி
தீர்ப்பொன்று சொல்லிவிடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேல்மகள் எனும் புனைபெயருடன் கவிதைகளை எழுதிவரும் வே.சுபிதா அவர்கள் வன்னி மண்ணின் வாழ்வியலுடன் இன்றும் பிணைந்து வாழ்பவர். தமிழர் தம் அடையாளங்களைத் தன் கவிதை ஊடாகப் பதிவு செய்வதில் பேரவாக் கொண்டவர்.இவர் கிராமிய வாழ்வியல், இயற்கை வனப்பு, பெற்றோர், காதல், மனித உணர்வுகள், இடம்பெயர்வு தந்த வலிகள், அவற்றிலிருந்து மீள முனைதல், பெண்ணியம் போன்ற விடயங்களைத் தன் கவிதைகளின் பாடுபொருளாகக் கோர்த்துக் கவி படைப்பதில் கைதேர்ந்தவராக விளங்குபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org